**சீதாவக்க பிரதேச சபை - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சீதாவக்க பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சீதாவக்க பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் 1.2.2 பந்தியின் (அ),(எ) அவதானிப்புக்கள் தவிர முனனைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 14,519,686 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் இரண்டு முறை பதிவுசெய்யப்பட்ட காரணத்தினால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதி ரூபா 14,519,686 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இதற்குரிய சீராக்கங்களை 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான சுதுவெல்ல, கலகெதர ஆகிய மயானங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சரியாக மதிப்பீடு செய்து 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | குறித்த நிலையான சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (இ) | மீளாய்வாண்டின் போது நிர்மாணிக்கப்பட்டு வரும் சுதுவெல்ல சுடலைச்சாலைக்காக ரூபா 7,350,366 ஆன நடைமுறைவேலைக்குப் பதிலாக கட்டிடக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. | சீராக்கங்களை 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் மேற்கொள்வதாக அறிய தருகின்றேன | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய பட்டியலிடப்பட்ட வீதவரி வருமானத்தில் ரூபா 21,913,790 தொகை கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களில் ரூபா 20,604,900 எனக் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் பரிவர்த்தனை செயப்படாத கொடுக்கல்வாங்கலான வருமானம் ரூபா 1,308,890 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வீதவரி வருமானம் ரூபா 17,193,770 தொகை கணக்கீடு செய்வதற்குப் பதிலாக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 15,884,880 எனக் கணக்கீடு செய்தமையால் பெறவேண்டிய வீதவரி ரூபா 1,308,890 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது | கணக்கீடு செய்யும் போது இடம்பெற்ற தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | வீதவரி மற்றும் நிலுவை வீதவரி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் முன்னராக கிடைத்த வீதவரி வருமானம் ரூபா 1,886,553 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,706,019 எனக் கணக்கீடு செய்யப்பட்டதால் முன்னராக கிடைத்த வீதவரி வருமானம் ரூபா 180,534 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது | மீளாய்வாண்டின் இறுதியில் முன்னராக கிடைத்த வீதவரி வருமான சீராக்கம் 2022 ஆம் ஆண்டின் போது மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். | வீதவரி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்குரிய பட்டியலிடப்பட்ட வீதவரி கடை வாடகையில் ரூபா 6,926,376 தொகை கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நிதிக் கூற்றுக்களில் ரூபா 6,457,984 எனக் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் பரிவர்த்தனை செயப்படாத கொடுக்கல் வாங்கலான வருமானம் ரூபா 468,392 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வீதவரி வருமானம் ரூபா 909,507 தொகை கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ரூபா 440,893 எனக் கணக்கீடு செய்தமையால் பெறவேண்டிய கடை வாடகையும் ரூபா 468,614 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட வாடகை வருமானத்தை சீராக்குவதாக அறிய தருகின்றேன் | கடை வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் பொது வழங்கல் கடன்கொடுத்தோருக்காக ஒதுக்கீடு ரூபா 113,182,553 ஆக இருந்த போதும் பொது வழங்கல் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு ரூபா 123,599,243 என கணக்கீடு செய்த காரணத்தினால் நடைமுறைப் பொறுப்பு ரூபா 10,416,690 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது, | இதற்குரிய கணக்கு 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். | சரியான பெறுமதிகளை கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | ரூபா 374,840 ஆன ஊழியர் பிணை கணக்கின் மீதி மற்றும் ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கின் மீதி நடைமுறைச் சொத்தொன்றாகவும் நடைமுறைப் பொறுப்பொன்றாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்படுவதாக அறிய தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் கையிலுள்ள காசு மற்றும் வங்கிக் கணக்குகளில் மீதி ரூபா 48,786,510 ஆக இருந்த போதும் காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 115,734,394 ஆன வங்கி மேலதிக பற்றாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 20221 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை கூற்றிலும் காசுப் பாய்சச்ல் கூற்றிலும் காண்பிக்கப்படும் காசு மீதிகளுக்கு இடையே ரூபா 164,520,904 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | சீராக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று இதனுடன் இணைத்து அனுப்புவதாக அறிய தருகின்றேன். | காசுப் பாய்ச்சல் கூற்றில் ரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் திரட்டிய மிகை ரூபா 352,853,717 ஆக இருந்த போதும் உரிமை மாற்றல் கூற்றின் பிரகாரம் அது ரூபா 500,631,911 ஆக இருந்தமையால் ரூபா 147,778,193 ஆன வேறுபாடொன்ற அவதானிக்கப்பட்டது. | மீதிகளுக்கு இடையே ரூபா 147,778,193 ஆன வித்தியாசம் 2022 ஆம் ஆண்டின் போது சீராக்குவதாக அறிய தருகின்றேன். | உரிமை வேறுபாட்டை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஓ) | பொருத்திகள் மீதி ரூபா 383,148 இற்குப் பதிலாக ரூபா 183,933 எனக் கணக்கீடு செய்த காரணத்தினால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கின் மீதி ரூபா 199,215 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | பெறுமதிகளுக்கு இடையே ரூபா 199,215 ஆன பெறுமதி 2022 ஆம் ஆண்டின் போது சீராக்குவதாக அறிய தருகின்றேன். | சரியான பெறுமதிகள் சரியான கணக்கில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஔ) | 2020 ஆண்டின் மூலதன மானிய பெறுவனவுகளில் கிடைத்த சொத்துக்களுக்கான காலக்கழிவு ரூபா 9,483,378 ஆக இருந்த போதும் அது ரூபா 50,303,341 எனக் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் ரூபா 40,819,963 ஆல் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அது 2022 இன் கணக்கில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன். | காலக்கழிவினை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டின் ரூபா 5,672,904 பெறுமதியான மீதியொன்று மூலதனச் சொத்துக் கணக்கில் 4-1312-2 ஆம் இலக்க நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏனையது என செலவு வைக்கப்பட்டிருந்த போதும் அப்பெறுமதிக்குரிய வரவுப் பதிவொன்று இடப்பட்டமைக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2022 இன் கணக்கில் சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன் | சரியாக வரவு செலவு பதிவுகள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 சனவரி 01 இல் உள்ளவாறு 02 கணக்கு விடயங்களின் ஆரம்ப மீதி, நாட்குறிப்பு பதிவின் பிரகாரம் ரூபா 702,098,041 ஆக இருந்த போதும் பேரேட்டுக் கணக்கிற்கு அது ரூபா 689,903,641 ஆக இருந்த காரணத்தினால் ரூபா 12,194,400 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சரியான பெறுமதி கணக்குகளில் சரியாக சீராக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் 03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 279,460,980 ஆக இருந்த போதும் அட்டவணையின் பிரகாரம் மீதி ரூபா 251,349,009 ஆக இருந்தது. | இச்சீராக்கம் 2022 ஆம் ஆண்டின் இறுதி நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். | - மேற்படி - |

### 1.7 இணக்கமின்மை

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துக்கள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 127 மற்றும் 128 ஆம் பிரிவுகள் மயானங்கள் மற்றும் சடலகாணி கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு | சபை அதிகாரப் பிரதேசத்தில் உள்ள மயானங்களில் சீதாவக்க பிரதேச செயலகத்திற்குரிய 26 மயானங்கள் மற்றும் பாதுக்க பிரதேச செயலகத்திற்குரிய 27 மயானங்களும் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பிரதேசத்திற்குரிய மயானங்களை கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். | குறித்த சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 153 ஆம் பிரிவு | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அபிவிருத்தி செய்யப்படாத 13 காணிகள் தொடர்பாக ரூபா 9,114,600 வரி விதிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு வரி விதிக்கப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செய்யப்படாத 13 காணிகள் என வெளிப்படுத்துகின்றேன். | பிரதேச சபைகள் சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலஙகை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித வைப்புக்கள் மீதியில் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய ரூபா 12,428,604 ஆன மீதயெயான்று காணப்பட்டதுடன் அம்மீதியை தீர்வுசெய்வதற்கு அல்லது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொகையில் வருமானத்திற்கு எடுக்கக்கூடிய பெறுமதியை வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வருமானத்திற்கு எடுத்தல் மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். | வருமானத்திற்கு எடுக்க வேண்டிய மீதிகளை சரியாக இனங்கண்டு தீர்வு செய்தல் வேண்டும். |

**02. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 147,778,193 ஆக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,356,058 ஆக இருந்தது.

**2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அசவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 363.9 மில்லியனுக்கு ஒப்பாக மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 272.2 மில்லியன் வரை ரூபா 91.7 மில்லியனால் குறைவடைந்திருந்தது. | கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வீடு வீடாகச் சென்று பணம் சேகரித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததுடன் ஆதனங்களை தடை செய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமையால் வருமான சேகரிப்பு குறைவடைந்திருந்ததாக அறிய தருகின்றேன். | சபையின் வருமானத்தை உயர்த்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 நிலுவை வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **ஏக்கர் வரி** | | |
| | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 82, 135 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 39, 946 தொகை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழையதாக இருப்பதுடன் அந்நிலுவையை அறவிடுவதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பாதுக்க உப அலுவலகத்தின் 2021.12.31 வரை நிலுவை ஏக்கர் வரி ரூபா 67,066.45 ஆக இருந்தது. அதில் ரூபா 39,945.95 தொகை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவையை அறவிடுவதற்கு 2022.01.26 ஆந் திகதி கடிதங்கள் மூலம் குறித்த உரிமையாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர. பணத்தை அறவிடுவதற்காக எதிர்காலத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிய தருகின்றேன். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணங்களும் | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 65,000,000 ஆகவும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா. 238,818,875 ஆகவும் இருந்தது. இதில் 2021 ஆம் ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 30,000,000 ஆகவும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா. 135,000,000 ஆக இருந்தன. | 2019 ஆம் ஆண்டின் முதலாவது 06 மாதங்களுக்காக பணத்தை பெற்றுக்கொள்வதற்காக மாகாண இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன்.<br>2019 ஆம் ஆண்டின் எஞ்சிய 06 மாதங்களுக்காக தயாரிக்கப்பட்ட அட்டவணைகள் அவிஸ்ஸாவெல நீதிவான் நீதிமன்றத்திற்கு பரீட்சிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன்.<br>2020 ஆம் ஆண்டிற்கான அட்டவணைகள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.<br>2021 ஆம் ஆண்டிற்கான அட்டவணைகள் எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென | முத்திரைக் கட்டணங்களையும் நீதிமன்றத் தண்டப்பணத்தையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மாகாண சபை மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட உதவி | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை பெறவேண்டிய மாகாண சபை மற்றும் பன்முகப்படுத்தப் பட்ட உதவி ரூபா 63,445,911 தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் பெறவேண்டிய மாகாண சபை மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட உதவி ரூபா 63,445,911 பெறுமதியில் ரூபா 24,004,050 தொகை 2022.08.15 ஆந் திகதி அறவிடப்பட்டிருந்தது. | பெறவேண்டிய மாகாண சபை மற்றும் பன்முகப்படுத்தப் பட்ட உதவியை பெற்றுக்கொள்ளல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 220 ஆக இருந்ததுடன் ஆரம்ப மற்றும் இரண்டாம் தரங்களில் 34 வெற்றிடங்கள் காணப்பட்டன. | நூலகர் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களை அரச சேவைகள் ஆணைக்குழு மூலம் நிரப்பப்பட்டுள்ளது. வருமான பரிசோதகர்கள் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளதால், தீர்வு வரை அது தொடர்பாக செயற்பட முடியாதுள்ளதாக தெரிவித்துக் கொள்கிறேன். சுகாதார நிர்வாகி மற்றும் பாலர் பாடசாலை (மட்டுப்படுத்தப்பட்ட) பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கான பொது விளம்பரம் தயாரிக்கப்பட்டு, அங்கீகாரத்திற்குப் பிறகு வெற்றிடங்கள் நிரப்பப்படும் என அறிய தருகின்றேன். | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மரணித்த, ஓய்வுபெற்ற மற்றும் வேலையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்கள் மற்றம் சேவையில் ஈடுபட்டுள்ள 12 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 864,226 ஆக இருந்தது. | மரணித்த, ஓய்வுபெற்ற மற்றும் வேலையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்கள் மற்றம் சேவையில் ஈடுபட்டுள்ள 15 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 2,336,373 ஆக இருந்தது. | அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மேல்மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் 2021 நவம்பர் 10 ஆந் திகதிய LGD/02/2021 சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 ஆம் நிதியாண்டிற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனைத்து கணக்குகளும் தீர்வுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து அதறங்குரிய நிதிக்கூற்றுத் தொகுதிகள் 2022 பெப்ரவரி28 ஆந் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி மன்ற | பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

உதவி ஆணையாளர் ஆகியோருக்கு பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சீத்தாவக்க பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டிற்கான திருத்திய கணக்குகள் 2022 யூன் 03 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது

## 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 8 செயற்பாடுகளில் நிறைவேற்றுவதற்காக வருடாந்த பாதீட்டின் மூலம் ரூபா 15,123,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று பரவல் காரணமாக இச்செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்ததாக அறிய தருகின்றேன் | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும். |

## 4.3 வருடாந்த பொருட் கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) களஞ்சிய இருப்பு பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் ஏலவிற்பனை செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த 3144 பொருள் அலகுகள் மற்றும் கைதவிர்ப்பதற்கு பரிந்துரைக்கப் பட்டிருந்த 32 அலகுகள் தொடர்பாக கணக்காய்வு திகதியான 2022 மார்ச் 04 ஆந் திகதி வரையிலும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான களஞ்சிய இருப்பு பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் ஏலவிற்பனை செய்வதற்கு பரிந்துரைக் கப்பட்டிருந்த 3144 பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக 2022.03.10 ஆந் திகதி பொதுச் சபையின் (ஊ)-01 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் ஏலவிற்பனை குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது. சரியான கைதவிர்ப்பு பதிவேட்டில் 16 பொருட்கள் இருந்ததுடன் அதன் பிரகாரம் கைதவிர்ப்புச் சபையொன்று நியமிக்கப்பட்டது. 2022 யூன் மாதத்தில் கைதவிர்ப்பு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக கைதவிர்ப்பு சபை யின் உறுப்பினர்களால் அறிவிக்க்பபட்டிருந்த. | கைதவிர்ப்பு செயற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும். |